<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நத்தம்.</u>

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | : 89/2017 | வா.சா. | : 2 |
| பெயர் | : அழகன் | த/பெ. | : கிருஷ்ணன் |
| தாலுகா | : நத்தம் | கிராமம் | : விளாம்பட்டி |
| தேதி | : 11.10.2023 | வயது | : 45/2023 |

1969–ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு .44–ன் படி சாட்சி அழைக்கப்பட்டு உறுதியுரை செய்யப்பட்டு அளித்த சாட்சியம்:

சாட்சியம் பதிவு செய்யப்பட்ட நேரம் 11.20 A.M. – 11.30 A.M.

<u>வாதிகள் தரப்பில் முதல் விசாரணை</u>:

நான் வாதிகள் தரப்பு 2வது சாட்சியாவேன். எனக்கு வாதிகள் மற்றும் பிரதிவாதிகளை தெரியும். இவ்வழக்கின் வாதிகள் தாக்கல் செய்துள்ள வழக்கு பற்றி தெரியும். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தை படித்துப் பார்த்து கையெழுத்து செய்தேன். அதிலுள்ள விபரங்கள் எனக்கு நன்கு தெரியும். எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகளை வாதிகள் தரப்பு சாட்சியமான ஏற்றுக் கொண்டு எனது ஆதார் அடையாள அட்டை நகலை சாட்சி சான்றாவணமாக குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

சா.சா.ஆ.1 – ஆதார் அடையாள அட்டை – நகல் (அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது)

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

2) எனக்கு சாட்சியமளிக்க நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. வாதிகளும், 4ம் பிரதிவாதி மாயம்மாளும் வழக்குச் சொத்தை அனுபவித்து வருகிறார்கள் என்று காட்டக்கூடிய ஆவணங்கள் எதுவும் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, நான் நேரில் பார்த்தது மட்டும் தான். வழக்குச் சொத்திற்கு அருகில் எனக்கு நிலம் உள்ளது என்று காண்பிக்க என் பெயரிலுள்ள பட்டா எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

விளாம்பட்டியில் எனக்கு நிலம் உள்ளதா என்றால் உள்ளது, அதற்கான ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

3) வழக்குச் சொத்தின் புல எண். 130/2 ஆகும். இவ்வழக்குச் சொத்து யார் பெயரிலுள்ளது என்பதற்கான ஆவணங்களை பார்த்துள்ளேனா என்றால் இல்லை. இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க என்னை ராம்லிங்கம் தான் கூப்பிட்டார் என்றால் ஆமாம். ராமலிங்கம் சொல்லிய விபரங்களை தட்டச்சு செய்த தாளில் நான் கையெழுத்து செய்தேன் என்றால் இல்லை. நான் நேரில் பார்த்த விபரங்களை தான் சொல்லியுள்ளேன். வழக்குச் சொத்து பற்றிய விபரங்கள் எனக்கு எதுவும் தெரியாது, ராமலிங்கம் கேட்டுக் கொண்டதன் பேரில் அவருக்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சியம் அளிப்பதால் எனது சாட்சியம் ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் சொல்லப்பட்டு தட்டச்சரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு சாட்சி சரி என்று ஒப்புக் கொண்டு என் முன்னிலையில் 11.10.2023. கையெழுத்து செய்துள்ளார்.

மா.உ.ம.நீ.நடுவர், நத்தம்.